# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 42 — 1973 ජනවාරි 12 වැනි සිකුරාදා — 1973.01.12

42 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு சனவரி மாதம் 12 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II ஆ) — விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 35 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 38 | ஏலவிற்பனைகள் .. .. .. | — |
| ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | — |


# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### சிறு கைத்தொழில் இலாகா

*தலைவர், கேள்விப்பத்திர சபை, சிறு கைத்தொழில் இலாகா, ஹேமாஸ் கட்டிடம், கொழும்பு 1, அவர்கள் 1973.3.14 ந் திகதி காலை 10 மணி வரை இரசாயனங்கள் விநியோகிப்பதற்கான கேள் விப்பத்திரங்களை உற்பத்தியாளர்களிடமிருந்தும், உற்பத்தியாளர் களின் பிரதிநிதிகளிடமிருந்தும் பெற்றுக்கொள்வார்.*

*2. முழு விபரங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் தயவு செய்து சிறு கைத்தொழில் இலாகாவுக்கு விண்ணப்பிக்கவும்.*

*சோமபால குணதீர,*
*பணிப்பாளர்,*
*சிறு கைத்தொழில் இலாகா.*

*தொடர் இல. 3/1(4/26)*
*சிறு கைத்தொழில் இலாகா,*
*கொழும்பு 1, 1973.1.1.*

1–340—12.01.73 ந் திகதிய வர்த்ததமானி இல. 42

### சிறு கைத்தொழில் இலாகா

*தலைவர், கேள்விப்பத்திர சபை, சிறு கைத்தொழில் இலாகா, ஹேமாஸ் கட்டிடம், கொழும்பு 1, அவர்கள் 1973.1.31 ம் திகதி காலை 10 மணி வரை, மட்டக்குளி, துல்கிரிய, வெயாங்கொடை பண்டகசாலைகளிலிருந்து பல்வேறு மின்சக்தி நிலையங்களுக்கு நூல், புடவை ஆகியவற்றைக் கொண்டு செல்வதற்கான விண்ணப் பப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வார்.*

*2. முழு விபரங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் தயவு செய்து சிறுகைத்தொழில் அதிபருக்கு விண்ணப்பிக்கவும்.*

*சோமபால குணதீர,*
*பணிப்பாளர்,*
*சிறு கைத்தொழில் இலாகா.*

*தொடர் இல. 3/1—(5/44)*
*சிறு கைத்தொழில் இலாகா,*
*கொழும்பு 1, 1973.1.1.*

*1-339—12.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 42*

### முக்கிய அறிவித்தல்

*ஸ்ரீலங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி (IIஅ) விலும் (IIஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக் கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத் திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.*

*எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் வ.*

## அஞ்சல் தொலைத்தொடர்புத் திணைக்களம்

முத்திரையிடப்பட்ட கடிதவுறைகளில் தேவைநிரப்பீடு (சப்ளை)

கொழும்பு 1, அஞ்சல் தொலைத்தொடர்புத் தலைமை அலுவலகக் கட்டிடத்திலுள்ள, அஞ்சல் தொலைத்தொடர்புத் திணைக்களத்து, திணைக்கள கேள்விச் சபையின் தலைவர், முத்திரையிடப்பட்ட கடிதவுறைகளின் தேவை நிரப்பீட்டிற்கான கேள்விப்பத்திரங்களை 1973 ம் ஆண்டு பெப்ரவரி 27 ந் திகதி காலை 10 மணிவரை பெறுவார்.

2. கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்போது கேள்விப்பத்திரகாரர் இருப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள். கேள்விப்பத்திரங்கள், 1 வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில், குறிப்பிட்டுள்ள நேரத்தில், அஞ்சல் அதிபர் நாயகத்தின் அலுவலகத்திலே திறக்கப்படும்.

3. 1973 ம் ஆண்டு பெப்ரவரி 26 ந் திகதி மாலை 3 மணிவரை கொழும்பு 1, பிரதான அஞ்சல் அலுவலகத்திலுள்ள முத்திரை கணக்காளரின் அலுவலகத்திலிருந்து கேள்விகள் செய்யப்பட வேண்டிய பாரங்களுக்கு விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளப்படலாம்.

4. எல்லாக் கேள்விப்பத்திரங்களும் இரட்டைப் பிரதிகளில் தயாரிக்கப்பட வேண்டும். கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படும் உறைகளின் மேல் வலதுபுற மூலையில் " முத்திரையிடப்பட்ட கடிதவுறைகளின் தேவை நிரப்பீட்டிற்கான கேள்வி " என குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்கள் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்படலாம். உள்ளூரிலுள்ள கேள்விப்பத்திரகாரர் ஒருவர், தனது கேள்விப்பத்திரத்தை இம்முறையில் அனுப்புவதற்கு விரும்பாவிடில், அவர் அல்லது அவரது முகவர் பொறியிடப்பட்ட விபரங்களும் கேள்விப்பத்திரகாரரின் பெயரும் முகவரியும் உறையின் மீது எழுதப்பட வேண்டும். கொழும்பு தலைமை அலுவலகக் கட்டிடத்திலுள்ள அஞ்சல் அதிபர் நாயகமும், தொலைத்தொடர்பு அதிபரினது அலுவலகத்தில் நேரில் கொடுத்துப் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம்.

6. கேள்விப்பத்திரங்கள் பெறப்படமுன், கேள்விக்கட்டுப்பணமாக ரூபா 50, கொழும்பு 1 லுள்ள, பிரதான அஞ்சல் அலுவலகத்தின் 17 வது பீடத்தில் (கவுண்டரில்) கட்டப்பட்டு, அதற்கான பற்றுச்சீட்டு காட்டப்பட வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 1973 ம் ஆண்டு பெப்ரவரி 26 ந் திகதி மாலை 3 மணிவரை கொடுக்கப்படும்.

7. வரையறுக்கப்பட்டுள்ள விதத்துக்கு அமைவாக மாதிரிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

8. இக்கேள்வியின் பொருட்டு, இறக்குமதி உத்தரவுப் பத்திரத்துக்கான சிபாரிசை இத்திணைக்களம் செய்யமாட்டாத காரணத்தால், மூலப்பொருள்களுக்கான இறக்குமதி உத்தரவுப்பத்திரம் தேவையில்லாத ஒப்பந்தகாரரிடமிருந்து மாத்திரமே கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

9. விபரங்கள், நிபந்தனைகள் சார்பான மேலதிகமான தகவல்கள் கொழும்பு 1, பிரதான அஞ்சல் அலுவலகத்திலுள்ள முத்திரை கணக்காளரிடமிருந்து விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளப்படலாம்.

சீ. ஜே. சேரசிங்க,
பதில் அஞ்சல் அதிபர் நாயகமும்
தொலைத்தொடர்பு அதிபரும்.

அஞ்சல் தொலைத்தொடர்பு
தலைமை அலுவலகம்,
கொழும்பு 1.

1-396—12.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 42

---

## கல்வித் திணைக்களம்

கொழும்பு தெற்குப் பகுதியிலுள்ள பாடசாலைகளுக்குப் பால் விஸ்கோத்துக்கள் கொண்டு செல்வதற்குரிய கேள்விப்பத்திரங்கள் கோரல்.

கேள்விப் பத்திரங்கள் கீழ்க்காணும் சேவைக்காக அழைக்கப்படுகின்றன.

1. 20 இருத்தல் பெட்டிகளில் அடைக்கப்பட்ட விஸ்கோத்துகளை மலிபன் விஸ்கோத்துத் தயாரிப்பாளர்கள் ஸ்தாபனத்திலிருந்தும் இலங்கை விஸ்கோத்துக் கொம்பனி ஸ்தாபனத்திலிருந்தும் கீழ்க்காணும் வட்டாரங்களிலுள்ள பாடசாலைகளுக்கு கொண்டு செல்லுதல்.

2. குறிப்பிட்ட வட்டாரங்கள் பின்வருவன :

1. கொழும்பு மத்தி.
2. கொழும்பு வடக்கு.
3. கொழும்பு தெற்கு.
4. தெகிவளை-கல்கிசை.
5. மொரட்டுவை.
6. கோட்டை.
7. கொலன்னாவை.
8. கொட்டாவை.
9. கோமகமை.
10. அவிசாவலை.
11. கெஸ்பேவ.
12. பொரளை.

கொழும்பு 7, கிறீன்பாத் கல்வித் திணைக்களப் பிரதேச வித்தியாதிபதி மேற்கூறிய சேவைகளுக்குரிய கேள்விப்பத்திரங்களை 1973 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ம் திகதி காலை 10.30 மணி வரை ஏற்றுக்கொள்வார்.

கேள்விப்பத்திரங்கள் மாதிரிப் பத்திரத்தில் அமைந்திருக்க வேண்டும். இம் மாதிரிப் பத்திரங்களை கொழும்பு 7, கிறீன்பாத் கல்வித் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் 1973 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம் திகதி காலை 11 மணி வரை விநியோகிக்கப்படும். கேள்விப் பொறுப்புப் பணமாக ரூபா 100 கொழும்பு 7, கிறீன்பாத் கல்வி திணைக்களத்தில் கட்டியதும் இப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் இத்தகைய பொறுப்புப் பணம் கட்டுவதிலிருந்தும் நீக்கப்பட்டவையாகும்.

கேள்விப்பத்திரங்களை வழங்க முன்னர் கேள்வியாளராக முன்வரும் ஒவ்வொரு விண்ணப்பக்காரரும் ரூபா 10,000 க்குக் குறையாத பெறுமதியுள்ள அசைவற்ற ஆதனங்களை உடையவரென்று பகுதிக் காரியாதிகாரியின் 1973 ஆம் ஆண்டுக்குரிய அத்தாட்சிப் பத்திரமும் இரண்டு வட்டாரங்களுக்குக் கேள்விப்பத்திரங்கள் கோரவிருப்பின் இரண்டு லொறிகளையாவது தன் சொந்தப் பெயரில் பதிவு செய்து, அவற்றிற்குரிய 1973 ம் வருட லைசென்சையும் பெற்றுள்ளாரென்றும் கொழும்பு 7, கிறீன்பாத் கல்வித் திணைக்கள வித்தியாதிபதிக்கு அத்தாட்சிப்படுத்த வேண்டும்.

இரண்டு லொறிகள் தேவையாக இருந்த போதிலும், பிரதேச வித்தியாதிபதி கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்ட வட்டாரங்களையும் வட்டாரங்களில் கொண்டு செல்லும் விதிகளை முன்னிட்டு மேலதிக லொறிகளைப் பாவனையில் விடுவதைப் பற்றி தீர்மானிப்பார். கேள்விப் பத்திரங்கள் பெறுமுன் அங்கீகாரம் பெற்ற கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரிடமிருந்தும், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் கிராம அபிவிருத்தி அதிபரிடமிருந்தும், தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் தொழில் ஆணையாளரிடமிருந்தும் பெற்றுக்கொண்ட அத்தாட்சிப் பத்திரத்தைக் கொண்டு தாங்கள் இவ்வேலையைச் செவ்வனே செய்து முடிக்கக் கூடியவர்கள் என்பதைக் குறித்த வித்தியாதிபதிக்கு நிரூபிக்க வேண்டும். மேற்கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாதவர்களுக்குக் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.

பிரதேச வித்தியாதிபதியிடமிருந்தோ அல்லது "கெயர்" ஸ்தாபனத்திடமிருந்தோ ஓடர்கள் கிடைத்த ஒரு கிழமைக்குள் விஸ்கோத்து விநியோகத்தைச் செய்து முடித்தல் வேண்டும். கேள்விப் பத்திரம் முழுவதையுமோ அல்லது அதன் ஒரு பகுதியையோ ஏற்றுக்கொள்ளக் கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு. கேள்வியாளர்கள் இக் கேள்விப் பத்திரங்கள் கவனிக்கப்படும்வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்பட்ட இறுதி நாளிலிருந்து ஆறு கிழமைவரைக்குள் கேள்விப் பத்திரங்களை வாபஸ் வாங்கப்படலாகாது. கேள்விப்பத்திரம் கோரல் பற்றிய விதிகளையும் மற்றும் விபரங்களையும் கொழும்பு 7, கிறீன்பாத் கல்வித் திணைக்களத்தில் நிருவாக உதவியாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

டபிள்யூ. டீ. பெர்ணண்டோ,
பிரதேச வித்தியாதிபதி.

கல்வித் திணைக்களம்,
கிறீன்பாத், கொழும்பு 7,
1972 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28 ந் திகதி.

1-319—12.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 42

### யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் உள்ள வெற்றுச் சாக்குகள் விற்பனைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

800 வெற்றுச் சாக்குகள் விற்பனைக்கு யாழ்ப்பாணம் சிறைச்சாலை அதிகாரியால் 73.1.31 முற்பகல் 10.00 மணிவரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. இலங்கைப் பிரசைகளின் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

3. விண்ணப்பக் கட்டுப்பணம் ரூபா 50/- கீழ்க்கையொப்பம் இட்டிருப்பவரின் காரியாலயத்திலோ அல்லது ஏதாவது ஒரு கச்சேரியிலோ கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டு விண்ணப்பப் பத்திரத்துடன் அனுப்பப்படல் வேண்டும். இதற்கெனக் குறிப்பிட்ட பத்திரம் தேவை இல்லை. கொடுபடவும் மாட்டாது.

4. முத்திரையிடப்பட்ட உறைகளில் விண்ணப்பப் பத்திரங்கள் அனுப்பப்படல் வேண்டும். "வெற்றுச் சாக்கு விலைக்குப் பெறுவதற்கு விண்ணப்பம்" என உறையின் மேல் இடது பக்கமாக எழுதி பதிவுத் தபாலில் சிறைச்சாலை அதிகாரி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிட்டு அனுப்பவும் அல்லது அவரின் காரியாலயத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பத்திரப் பெட்டியில் போடவும்.

5. விண்ணப்பப் பத்திரத்தில் விலை விபரம் இலக்கத்திலும், எழுத்திலும் எழுதப்படல் வேண்டும். இலக்கத்திலும், எழுத்திலும் எழுதப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம். ஏதாவது திருத்தங்கள் அல்லது இடை எழுத்துக்கள் இருந்தால் அவ்விடங்களில் விண்ணப்பக்காரர் தமது குறுகிய கையெழுத்தை இடவேண்டும்.

6. 73.1.31 முற்பகல் 10.00 மணிக்கு கீழ்க்கையொப்பம் வைத்திருப்பவரின் காரியாலயத்தில் விண்ணப்பங்கள் திறக்கப்படும் பொழுது விண்ணப்பக்காரர்கள் சமுகமாக இருக்க அனுமதிக்கப்படுவர்.

7. தெரிவு செய்யப் பெற்ற விண்ணப்பக்காரருக்கு அவர் கொடுத்துள்ள முகவரிக்கு தபால்மூலம் அறிவிக்கப்படும். விண்ணப்பம் ஏற்றுக் கொண்டதாக அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 7 நாட்களுக்குள் பணத்தைக் கட்டி மேலே குறிக்கப்பட்ட பொருட்களை எடுத்துச் செல்லாவிட்டால் அவர் தனது கட்டுப் பணத்தை இழக்க நேரிடும். அத்துடன் இவருடைய பெயர் நிராகரிக்கப்பட்ட கொந்தராத்துக்காரருடைய பட்டியலில் சேர்க்கப்படும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பக்காரர் சாக்குகளை எடுத்துச் சென்ற பின்னர் ஏனைய கட்டுப்பணங்கள் திருப்பிக் கொடுக்கப்படும்.

8. விண்ணப்பக்காரர்கள் பொருட்களைப் பார்வையிடுவதற்காக யாழ்ப்பாணச் சிறைச்சாலையினுள் கிழமை நாட்களில் வழக்கமான வேலை நேரங்களில் அனுமதிக்கப்படுவர்.

9. வேறு விபரங்கள் அறிய விரும்பின் கீழ்க்கையொப்பமிட்டிருக்கும் அதிகாரியிடம் பெற்றுக் கொள்ளலாம்.

க. தங்கராஜா,
சிறைச்சாலை அதிகாரி,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணச் சிறைச்சாலை,
யாழ்ப்பாணம்,
20.12.1972.

1-313—12.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 42

---

### சிறைச்சாலைப் பகுதி

### 1972-1973 ஆம் நிதியாண்டுக்கான நீர்கொழும்புச் சிறைச்சாலைச் சமையலறைத் தேங்காய் மற்றும் பயனற்ற பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கான கேள்விப் பத்திரம்

1973.1.31 ம் திகதி மு. ப. 10.30 மணிக்கு முன்னர் கீழ்க்காணும் பொருட்களுக்கான கேள்விப் பத்திரம் நீர்கொழும்புச் சிறைச்சாலை அதிகாரியால் கோரப்படுகின்றது.

(1) தினமும் 450 தேங்காய் பூவின் கழிவுப்பொருள்

(2) சமையலறைக் கழிவுப் பொருள்கள்

2. கேள்விப் பத்திரத்துக்கான பணம் ரூ. 10/- இவ்வலுவலகத்திற் செலுத்தி அதற்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டைக் கேள்விப் பத்திரத்துடன் இணைத்தல் வேண்டும். கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டதாயின் அந்நபர் அம்மாதம் முதல் திகதியில் அதற்குரிய தொகையினைச் செலுத்தி மேற்காட்டிய பொருள்களைத் தினமும் அகற்றிச் செல்லுதல் வேண்டும். கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று கோரப்பட்டவருக்கு அவரால் கொடுக்கப்பட்ட விலாசத்திற்கு தபால் மூலம் அனுப்பப்பட்டாலோ, கொண்டு சென்று கொடுக்கப்பட்டாலோ, அவர் அதை ஏற்றுக்கொண்டார் என்று கருதப்படும்.

3. இப்பொருள்களைத் தினமும் அகற்றிச் செல்லுதற்கான மாத மதிப்பீட்டைக் கேள்விப்பத்திரத்தைக் கோரப்படுபவர் சுட்டிக் காட்டல் வேண்டும். கேள்விப்பத்திரம் சீல் பொறிக்கப்பட்ட மேலுறையில் இட்டு, கீழ் காணப்படும் விலாசம் இடப்படல் வேண்டும். மேலுறையின் இடப்பாக மூலையில் "தேங்காய், சமையலறைக் கழிவுப் பொருட்களுக்கான கேள்விப்பத்திரம்" என்று இடப்படல் வேண்டும். இதற்காகப் பிரத்தியேகமாக அச்சிடப்பட்ட பத்திரம் வழங்கப்படமாட்டா.

4. கேள்விப்பத்திரங்கள் 1973 ம் ஆண்டு தை மாதம் 31 ம் திகதி மு. ப. 10.35 க்கு, நீர்கொழும்புச் சிறைச்சாலை அதிகாரியின் அலுவலகத்தில் திறக்கப்படும். கேள்விப்பத்திரம் கோரப்படுபவர் அந்நேரம் சமுகமளிக்க அனுமதிக்கப்படுவர்.

(5) இது பற்றிய வேறு விபரங்கள் கீழ்காணும் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஆர். டீ. டக்வோத்,
சிறைச்சாலை அதிகாரி,
நீர்கொழும்பு.

1-312—12.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 42

---

### 1973 ஆம் ஆண்டில் சிறைச்சாலைத் திணைக்களத்திற்கு உணவுப் பொருட்கள் விநியோகிப்பதற்கான கேள்விப் பத்திரங்கள்

இலங்கையிரிடமிருந்து ("இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசைகளாயிருப்பவராகும்) கீழ்க்காணும் பட்டோலையில் குறிப்பிடப்பட்டிருக்கும் நிலையங்களுக்கு 1973.12.31 வரை உணவுப் பொருட்கள் விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. அல்லது நிலையம் மூடப்படும் தினம் வரை

| நிலையம் | கேள்விப் பத்திர முற்பணம் | பிணைப் பணம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியும் திறக்கப்படும் திகதியும் |
|---|---|---|---|
| மீயங்கனை புனருத்தாரன பாசறை | 50 | 1,000 | 25.1.1973 |
| ரிதியகம .. | 50 | 1,000 | 25.1.1973 |

2. கேள்விப்பத்திரகாரர் குறிப்பாக அவதானிக்க வேண்டியது என்னவெனில், உணவுகளை சாதம், பாண், தேநீர், சீனி, பருப்பு, சீரகம் மல்லியை தவிர்த்து அமைத்திருப்பதால் இவற்றை தவிர்த்தே உணவு விநியோகிப்பதற்கு கேள்விப்பத்திரங்களை அனுப்புதல் வேண்டும். ரிதியகம ஆதிய இடங்களுக்கு மீன் விநியோகித்தலும் தவிர்க்கப்படல் வேண்டும்.

3. எல்லா கேள்விப் பத்திரங்களும் மூலமும் பிரதியுமாக இரண்டும் ஓரே உறையில் வைத்து, தலைவர், கேள்விச்சபை, சிறைச்சாலைத் திணைகளம், கொழும்பு 9 என்று முகவரியிட்டிருத்தல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது கேள்விப்பத்திரக்காரர் அல்லது அவருடைய பிரதிநிதி நேர்முகமாக சிறைச்சாலைத் தலைமைக் காரியாலயத்தில் சிறைச்சாலை அதிகாரி, ஜே. பி. டெல்கொடை அவர்களிடம் நேரில் கையளித்து அதற்கான பற்றுச்சீட்டை பெறுதல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்கள் அடங்கிய உறைகளில் இடதுகை மேல் பக்கத்தில் "உணவு பொருட்கள் விநியோகம்" என்று குறிப்பிட்டு தலைவர், கேள்விச்சபை, சிறைச்சாலைத் திணைக்களம், கொழும்பு 9

என்ற முகவரிக்கு முதலாம் பந்தியில் குறிப்பிட்ட திகதியன்று காலை 10.30 மணிக்கு முன்னதாக அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி, நேரத்திலிருந்து 5 நிமிடத் திற்குப்பின், அதாவது காலை 10.35 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரக்காரர்கள் விரும்பினால் அந்த நேரத்தில் பிரசன்னமாயிருக்கலாம்.

6. கேள்விப்பத்திரங்கள் கொழும்பு 9 இல் இருக்கும் சிறைச்சாலைத் தலைமைக் காரியாலயத்தில் சிறைச்சாலை ஆணையாளரால் விநியோகிக்கப் படும் பத்திரத்திலேயே இருக்க வேண்டும். அப்படி இல்லாத கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன் தினம் மாலை 2.00 மணி வரையினுமே கேள்விப்பத்திரங்கள் விநியோ கிக்கப்படும்.

7. கேள்விப் பத்திரங்களில் கொடுக்கும் வீதங்களை முடிவுத் திகதியி லிருந்து மூன்று மாதங்களுக்கு திறந்து வைத்திருக்க வேண்டும் என் பதை கேள்விப்பத்திரக்காரர் கவனித்தல் வேண்டும்.

8. கேள்விப்பத்திரத்தில் ஏதேனும் மாற்றங்கள் அல்லது தேய்த் தழித்தல் செய்தால் அவற்றிற்கெல்லாம் முதலெழுத்தொப்பம் இருத்தல் வேண்டும்.

9. கேள்விப்பத்திரங்களை பெறுவதற்கு மேலே குறிக்கப்பட்டுள்ள பட்டோலையின் பிரகாரம் முற்பணத்தை சிறைச்சாலைத் திணைக்களத்திலோ கச்சேரிகளிலோ (கொழும்பு கச்சேரியைத்தவிர) கட்டி பற்றுச்சீட்டைப் பெற்று அதனைக் காண்பித்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் எந்த கேள்விப்பத்திரக்காரரேனும் அவர்களுடைய கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதென எழுத்தில் அறிவித்தபின் 10 நாட்களுக்குள் கீழே குறிப்பிட்ட பிணைக்கட்டுப் பணத்தை கட்டத்தவறினால் அல்லது கட்ட மறுத்தால் அவர்கள் முற்பணமாகக் கட்டிய தொகையை அரசாங் கத்திற்கு இழந்துவிட நேரிடுவதோடு, அரசாங்க ஒப்பந்தம் எதனோடும் சம்பந்தமில்லாதவர்களாகக் கருதப்பட்டு தவறிய ஒப்பந்தக்காரர் என்று கருதப்படும் பட்டியலில் அவர்கள் பெயர் சேர்க்கப்பட நேரிடும். மேலும் கேள்விப்பத்திரக்காரர் இலங்கை அரசாங்கத்தின் சார்பாக கடமை புரியும் சிறைச்சாலை ஆணையாளருக்கு இலங்கை நாணயம் ரூபா மூவாயிரம் (ரூபா 3,000) தண்டப்பணமாக செலுத்த நேரிடும். இப்பணத்தை சட்ட விதிப்படி அறவிடப்படும். கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட தென்ற செய்தியை கேள்விப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டுள்ள முக வரிக்கு தபால் மூலமாக அல்லது நேரிலோ அனுப்பப்பட்டால் அது அவருக்கு கிடைத்ததென்று கருதப்படும். மற்றும் எல்லா முற்பணமும் கையொப்பமிட்டவுடன் திருப்பிக்கொடுக்கப்படும்.

10. பட்டியலில் குறிப்பிட்ட பிரகாரம் முற் பணத்தை வேறுவேறாகக் கட்டவேண்டும் என்பதை கேள்விப் பத்திரக்காரர் குறிப்பாகக் கவனித்தல் வேண்டும். வினியோகம் செய்ய விரும்பும் வீதத்தை இலக்கத்திலும் சொல்லிலும் குறிப்பிடல் வேண்டும். இலக்கத்திற்கும் சொல்லிற்கும் வித்தியாசம் இருப்பின், அல்லது வீதத்தை சொல்லில் குறிப்பிடத் தவறி னால் அக்கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படலாம்.

11. ஏற்றுக்கொண்டவுடன் கேள்விப்பத்திரக்காரர்கள் தாங்கள் ஒப் பந்தத்தை சரிவர நடத்தி முடிப்பார்களென பிணை நிற்கக்கூடிய இரண்டு பொறுப்பானவர்களின் பெயர்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

12. ஒவ்வொரு ஒப்பந்தத்தையும் சரிவர நிறைவேற்றுவதாக ஒப்புக் கொண்டு, பிணைசேர்ந்த ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். பிணைப் பணத்தின் விபரம் முதலாம் பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

13. கேள்விப்பத்திரங்கள் எல்லா நிபந்தனைகளுக்கும் அடங்கியிரா விடில் நிராகரிக்கப்படும்.

14. கேள்விப் பத்திரங்களில் ஒன்றையோ அல்லது எல்லாவற்றை யுமோ, அல்லது ஒரு கேள்விப்பத்திரத்தின் ஒரு பகுதியையோ ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு உரிமையுண்டு.

15. கேள்விச் சபையின் அனுமதியில்லாமல் ஒப்பந்தத்தை உப வாடகைக்கு அனுமதிக்கப்படமாட்டாது. ஒப்பந்தக்காரினால் இன்னொரு வரை தன் சார்பாக கடமையாற்றும்படி கொடுக்கப்படும் தத்துவ அதிகா ரத்தை நிராகரிக்க அரசாங்கத்துக்கு உரிமையுண்டு.

16. ஒப்பந்தத்தின்படி சேவையை நிறைவேற்றுவதற்காக " இலங்கை யரையே " சேவையில் ஈடுபடுத்தல் வேண்டும். குறிப்பிட்ட நிலையங்களின் அதிகாரிகள் ஒப்பந்தக்காரரினால் நியமிக்கப்பட்ட தொழிலாளி யாரேனும் ஏற்றுக்கொள்ள சம்மதமில்லாவிட்டால், அதனை ஆட்சேபித்து எழுத்தில் கொடுத்தால் ஒப்பந்தக்காரர் அதன்படி குறிப்பிட்ட தொழிலாளிகளை சேவையில் ஈடுபடுத்தல் ஆகாது.

17. இதற்கு முன் அரசாங்க ஒப்பந்தத்தைச் செய்யாத ஒரு கேள்விப் பத்திரக்காரர் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் பொழுது, தன்னுடைய சொத்துக்களின் பெறுமதியை, காணிகள் எந்தெந்த வட்டாரத்திலுள்ளன என்பதைக் குறித்து மாவட்ட காரியாதிகாரியினால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்புதல் வேண்டும்.

இத்திணைக்களத்துடன் இதுவரையில் ஒப்பந்தம் செய்து கொண்ட வர்கள், தற்போது விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் அல்லது பகுதியில் ஒப்பந்தம் செய்யாதிருந்தால், இதற்கு முன் எந்த மாவட்டத்தில் அல்லது பகுதியில் ஒப்பந்தம் செய்தவர்கள் என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும்.

18. இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதியாக கடமையாற்றும் சிறைச் சாலை ஆணையாளருடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். இப் பதவிப்பெயர் அதனைத் தற்போது வகிப்பவரையும், இதன்பின் அப்பத வியை வகிப்பவரையும் குறிக்கும்.

19. மேற்கொண்ட விபரங்களை சிறைச்சாலைத் திணைக்களத்தில் பெற் றுக்கொள்ளலாம்.

ஏ. ஏ. டி சில்வா,
பதில் சிறைச்சாலை ஆணையாளர்.

சிறைச்சாலைத் தலைமைக் காரியாலயம்,
கொழும்பு 9,
1973 ம் ஆண்டு ஜனவரி மீ 02 ந் உ.

1–315—12.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 42

---

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## காட்டுத் திணைக்களம்—ஏல விற்பனை

மட்டக்களப்பு, கல்முனை வட்டாரத்தில் பல இடங்களில் பறிமுதல் செய்யப்பட்ட பல இனங்களைக் கொண்ட மரங்களும், கரத்தையும் மட்டக்களப்பு மாவட்ட வன பரிபாலன அதிகாரியால் 22.1.73 காலை 9.00 மணிக்கு கல்முனை பகுதி வட்டார வன அதிகாரியின் காரியாலயத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

கேட்க விரும்புவோர் ஏலவிற்பனைக்கு முன்பதாகவே மரங்களை பார்வையிடும்படி கோரப்படுகின்றனர்.

ஏல விற்பனை பற்றிய முழு விபரங்களும் கீழ் கையொப்பமிட்ட வரிடமோ அல்லது மேற்கூறிய கல்முனைப் பகுதி வட்டார வன அதிகாரியின் காரியாலயத்திலோ பெற்றுக்கொள்ளலாம்.

டபிள்யு. ஜெ. ஜெ. மேதர்,
மாவட்ட வன பரிபாலன அதிகாரி, கி. பி.,
மட்டக்களப்பு.

மாவட்ட வன பரிபாலன காரியாலயம்,
மட்டக்களப்பு,
6.12.72.

1-408—12.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 42

## அரசாங்க விநியோகத் திணைக்களம்

1973 ம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ந் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் கொழும்பு-2 சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தையிலுள்ள அரசாங்க வினியோகத் திணைக் களத்தில் நல்ல முறையில் பாவிக்கப்பட்ட லொறி, வான், கார் வகையினவான 25 மோட்டார் வாகனங்கள் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். வாகனங்களை மேற்குறிப்பிட்ட நிலையத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

மேலதிக விபரங்களை அரசாங்க விநியோகத் திணைக்களப் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். ஏ. ரூபசிங்க,
அரசாங்க விநியோகத்
திணைக்களப் பணிப்பாளர்.

கொழும்பு-2.
12.1.73.

1-174—12.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 42

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானி களுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க் விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| சனவரி .. | 5. 1.73 | வெள்ளி .. | 27.12.72 | புதன் .. | ந. ப. | 12.00 |
| | 12. 1.73 | வெள்ளி .. | 3. 1.73 | புதன் .. | ந. ப. | 12.00 |
| | 19. 1.73 | வெள்ளி .. | 10. 1.73 | புதன் .. | ந. ப. | 12.00 |
| | 26. 1.73 | வெள்ளி .. | 17. 1.73 | புதன் .. | ந. ப. | 12.00 |
| பெப்புருவரி .. | 2. 2.73 | வெள்ளி .. | 24. 1.73 | புதன் .. | ந. ப. | 12.00 |
| | 9. 2.73 | வெள்ளி .. | 31. 1.73 | புதன் .. | ந. ப. | 12.00 |
| | 15. 2.73 | வியாழன் .. | 7. 2.73 | புதன் .. | ந. ப. | 12.00 |
| | 23. 2.73 | வெள்ளி .. | 14. 2.73 | புதன் .. | ந. ப. | 12.00 |
| மாச்சு .. | 2. 3.73 | வெள்ளி .. | 21. 2.73 | புதன் .. | ந. ப. | 12.00 |
| | 9. 3.73 | வெள்ளி .. | 28. 2.73 | புதன் .. | ந. ப. | 12.00 |
| | 16. 3.73 | வெள்ளி .. | 7. 3.73 | புதன் .. | ந. ப. | 12.00 |
| | 23. 3.73 | வெள்ளி .. | 14. 3.73 | புதன் .. | ந. ப. | 12.00 |
| | 30. 3.73 | வெள்ளி .. | 21. 3.73 | புதன் .. | ந. ப. | 12.00 |
| ஏப்பிறல் .. | 6. 4.73 | வெள்ளி .. | 28. 3.73 | புதன் .. | ந. ப. | 12.00 |
| | 11. 4.73 | புதன் .. | 4. 4.73 | புதன் .. | ந. ப. | 12.00 |
| | 19. 4.73 | வியாழன் .. | 11. 4.73 | புதன் .. | ந. ப. | 12.00 |
| | 27. 4.73 | வெள்ளி .. | 18. 4.73 | புதன் .. | ந. ப. | 12.00 |

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஒகத்து மீ 18 ந் உ.

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.